# ஆட்கடத்தல் வியாபாரம் அல்லது மோசடிக்கு இரையாகாமல் சரியான வழியில் வெளிநாடு செல்வோம்



ආගමන හා විගමන
දෙපාර්තමේන්තුව

ශ්‍රී ලංකා විදේශ සේවා
නියුක්ති කාර්යාංශය

## வெளிநாடு செல்வதற்கு முன்னர் நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள்

- நீங்கள் வெளிநாடு செல்வதற்கு முன்னர் சட்டரீதியாகப் பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டு, விமானப் பயணச்சீட்டு, உரிய நாட்டின் வீசா, கொவிட் பரிசோதனை சான்றிதழ், தடுப்பூசி சான்றிதழ் மற்றும் தொழிற் பயிற்சி சான்றிதழ் என்வற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

- நீங்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வதற்கு உத்தேசிக்குமிடத்து அந்த நாட்டில் தொழில் புரிவதற்கான சட்ட திட்டங்கள் தொடர்பில் அறிந்துகொள்ளல். (இதற்காக இந்தக் கையேட்டின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து அல்லது தூதரகங்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.)

- நீங்கள் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (Agency) மூலம் வெளிநாடு செல்வதற்கு உத்தேசிக்குமிடத்து அந்த வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (Agency) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதன் சட்ட ரீதியான நிலைமை மற்றும் அதன் நடவடிக்கைகள் குறித்து தகவல்களை தேடிப்பார்த்து உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

- சட்ட ரீதியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றுக்குச் செல்லும் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆயுட் காப்புறுதியொன்றைப் பெற்றிருப்பது அவசியமாகும். சட்ட விரோதமாக ஒரு நாட்டுக்குள் நுழையும் ஒருவருக்கு உரிய முறையில் சுகாதார வசதிகள், சம்பளம் அல்லது ஏனைய வரப்பிரசாதங்கள் கிடைக்காது. (வெளிநாடுகளில் சுகாதாரச் செலவுகள் மிகவும் அதிகமஎதால் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகுமிடத்து தங்களது உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்.)

- சுற்றுலா வீசாவில் வெளிநாடு ஒன்றில் நுழையும் ஒருவருக்கு அந்த சுற்றுலா வீசாவை தொழில் வீசாவாக மாற்றிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காது (உதாரணம் - மலேசியா)

- எந்தவொரு இலங்கையரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்லும் போது அவர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

- கடல் வழியாக நாடுகளுக்குள் நுழைந்த போதிலும் தொழில் புரிவதற்கு வீசா அல்லது அகதிகள் அந்தஸ்து கிடைக்காது (உதாரணம் : அவுஸ்திரேலியாவுக்கு கடல் வழியாக நுழைந்த போதிலும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவர்)

## உரிய முறையில் நீங்கள் வெளிநாடு செல்லாத போது உங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

- சட்ட விதிகள் மீறப்படுவதனால் வெளிநாடு செல்வதற்கு விமான நிலையத்திற்கு வருகைத்தரும் போது அல்லது மீண்டும் இலங்கைக்கு நாடு திரும்பும் போது கைதுசெய்யப்படுதல். (உதாரணம் - குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தில் சட்ட விரோதமாக நாட்டிலிருந்து வெளியேறல் / முயற்சித்தல் ஒரு குற்றவியல் குற்றமாகும்)

- தான் உழைத்த பணத்தை மோசடிக்காரர் ஒருவருக்கு வழங்குவதன் மூலம் தனது சொத்துக்கள் பணம் என்வற்றை இழத்தல் (இவ்வாறான நிகழ்வுகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அதிகளவான முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று அந்தப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுதல்)

- தான் பயணிக்க இருக்கும் நாட்டில் (Destination) இடைத்தங்கும் நாட்டில் (Transit) கைதுசெய்யப்படுதல் அல்லது பல்வேறுபட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அமைப்புக்களின் இரையாக மாறுதல் (அதிகமான சந்தர்ப்பங்களில் இவ்வாறான விடயங்களில் பயங்கரவாத அமைப்புக்களின் அல்லது மாபியா குழுக்களின் குற்றவாளிகள் சம்பந்தப்படுகின்றனர்)

- ஆட்கடத்தல்காரர்கள் ஆட்களை கொண்டு-செல்வதற்கு மிகவும் பாதுகாப்பற்ற முறைகளைப் பயன்படுத்துவதனால் உயிராபத்து அல்லது வேறு உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் (உதாரணம் - கொள்கலன் வண்டிகள், மீன்பிடிப் படகுகள், டோலர் இயந்திரக் கப்பல்கள்)

- சட்ட விரோதமாக ஒரு நாட்டுக்குள் நுழைதல் அல்லது அதற்காக முயற்சிக்கின்ற போது உரிய நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறுவதன் பெறுபேறாக உங்களுக்கு மீண்டும் அந்த நாட்டுக்கு நுழைவது தடைசெய்யப்படுதல், திருப்பி அனுப்பப்படுதல் (Refuse Entry)சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு நாடுகடத்தப்படல் (இவ்வாறு இலங்கையர்கள் அதிகமானோர் வெளிநாட்டு சிறைக்கூடங்களில் அல்லது பாதுகாப்பான வீடுகளில் இலங்கைக்கு வரமுடியாமல் வாழ்ந்து வருகின்றனர்)

- சட்டவிரோதமாக வெளிநாடு சென்று அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடும் போது தங்களது குடும்பத்தின் நெருங்கியவர்களின் சொத்து செல்வங்கள், வீடு வாசல்களை செலவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நேரிடுவதால் தாங்கள் தற்போதுள்ள நிலையை விட பொருளாதார ரீதியில் பின்னடைவுக்கு ஆளாகுதல் (இவ்வாறான விடயங்களில் அரசாங்கத்தின் தலையீடு குறைவாக இருப்பதனால் தனது சொந்த செலவில் விமானப் பயணச்சீட்டு அல்லது தண்டப்பணத்தை செலுத்த நேரிடுதல்)

## மனித வியாபாரம் என்பது

**பணம் அல்லது வேறு நன்மையொன்றை எதிர்ப்பார்த்து எவரேனுமொருவரை ஏமாற்றி பயமுறுத்தி, அதிகாரத்தைப் பிரயோகித்து அல்லது அச்சுறுத்தி அவரைக் கடத்திச் செல்லல், ஆட்சேர்த்தல் அல்லது கொண்டுசெல்வதன் மூலம் அவரை நாட்டினுள் அல்லது நாட்டுக்கு வெளியே சுரண்டலுக்கு உட்படுத்தல்.**

உதாரணமாக : பல்வேறுபட்ட நபர்கள், குழுக்கள் மூலம் சிறந்த தொழில்வாய்ப்பை பெற்றுத்தருவதாக பொய்யான வாக்குறுதி அளித்து இந்த நாட்டில் அல்லது வெளிநாடு ஒன்றில் உங்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல். ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுப்பனவு செலுத்தாது பலவந்தமாக பல்வேறு வேலைகளை எடுத்தல் அல்லது தங்களது சிறுநீரகம் போன்ற உடல் உறுப்புக்களை மோசடியாக அகற்றிக்கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

## ஆட்கடத்தல் என்பது

பணம் அல்லது வேறு நன்மையொன்றை எதிர்ப்பார்த்து தனது தேசியம் அல்லது நிரந்தர வசிப்பிடத்திற்கான உரிமையற்ற நாடொன்றுக்கு சட்டவிரோதமாக நுழைவதற்கு ஆட்களுக்கு வசதியளித்தல்.

# மனித வியாபாரத்திற்கும் ஆட்கடத்தலுக்கும் இடையிலான வித்தியாசங்கள்

| மனித வியாபாரம் | ஆட்கடத்தல் |
| --- | --- |
| தனது தாய்நாட்டிலேனும் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னுமொரு பிரதேசத்திற்கு அழைத்துச்சென்று சுரண்டலுக்கு உட்படுத்தப்படலாம். | ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டுக்கு கட்டாயமாக கொண்டுசெல்லப்படுதல். |
| மனித வியாபாரத்திற்கு உட்படும் ஒருவர் அது தொடர்பில் அறிவின்றி ஏமாற்றப்படுதல். | சட்ட விரோதமாக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு கொண்டு செல்லப்படுவதை அறிந்த நிலையில் ஏமாற்றப்படல் அல்லது சுய விருப்பத்துடன் இருத்தல் |
| பாதிக்கப்பட்டவர் பயணமுடிவிடத்தில் தொடர்ச்சியாக சுரண்டலுக்கு உள்ளாதல். | பயணிக்கும் நாட்டை அண்மித்தவுடன் மோசடிக்காரரின் பங்கேற்பு முடிவடையும். |
| பயணமுடிவிடத்தில் அவரது சுதந்திரமான பயணம் / நடமாட்டம் கட்டுப்படுத்தப்படல். | பயணிக்கும் நாட்டை அடைந்தவுடன் மோசடிக்காரரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவார். |

# மனித வியாபாரத்திற்கும் ஆட்கடத்தலுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்

**ஆட்கடத்தலுக்கு இரையாகும் பெரும்பாலானோர் மனித உரிமை மீறலுக்கு உள்ளாகலாம். நடைமுறை உலகை கருத்திற்கொள்ளும் போது இரண்டு எண்ணக்கருக்களும் சமனாக நோக்கப்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.**

உதாரணம் - எவரேனுமொருவர் தன்னை சட்ட விரோதமான முறையில் இன்னுமொரு நாட்டுக்குள் நுழைவிக்குமாறு மோசடிக்காரர் ஒருவரிடம் உதவி கேட்க முடியும். அதன் போது அவர் சுரண்டலுக்கு உட்படும் நிலைக்கு ஆளாகலாம். அதாவது மோசடிக்காரருக்கு பண ரீதியான நன்மை கிடைக்கும் வகையிலான அடிமைத்தனம் போன்றதொரு நிலைக்கு அவர் உள்ளாகலாம்.

உதாரணமாக மோசடிக்காரருக்கு பண ரீதியான கொடுப்பனவொன்றை செலுத்துவதற்காக அடிமை தனத்தின் கீழ் வேலை செய்ய நேரிடுதல், செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணங்கள் இல்லாதிருத்தல், பயணிக்கும் நாட்டின் மொழியைப் பேச முடியாதிருத்தல், தொழிலைத் தேடிக்கொள்வதிலுள்ள சிரமம் போன்ற பாதுகாப்பற்ற நிலமைக்கு உள்ளாகும் இத்தகைய முறையற்ற குடிப்பெயர்வாளர்களின் நிர்க்கதி நிலையைப் பயன்படுத்திக்கொள்ளும் ஆட்கடத்தல்காரர்கள் அவர்களை ஆட்கடத்தல் குற்றத்திற்கு இரையாக்கிக்கொள்கின்றனர்.

**1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்திற்கமைய பின்வரும் விடயங்கள் குற்றவியல் குற்றங்களாக கருதப்படுகின்றன.**

- சட்ட விரோதமாக ஒருவரையோ அல்லது பலரையோ நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது திட்டமிடுதல்.

- அவ்வாறு, ஏற்பாடு செய்வதற்கு முயற்சித்தல், தயாராதல் அல்லது ஏற்பாடு செய்வதற்கு வேறொருவருக்கு உதவுதல் (ஏற்பாடு செய்தல் என்பது வெளிநாடு ஒன்றில் தொழில்வாய்ப்பை பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்து ஆட்சேர்ப்புச் செய்தல், தெரிந்துகொண்டே பொய்யாக வாக்குறுதியளித்தல், பொய்யான தகவல்களை வழங்குதல், ஏமாற்றும் நோக்கில் தவறான செய்திகளை கூறல், கடல், தரை அல்லது ஆகாய மார்க்கத்தில் ஆட்களை கொண்டுசெல்லல்.)

- தனக்கு சொந்தமில்லாத கடவுச்சீட்டின் மூலம் வெளிநாடு செல்ல எத்தனித்தல்.

- அனுமதிக்கப்படாத இறங்குதுறையொன்றின் மூலம் வெளிநாடு செல்லல்(உதாரணம்: அனுமதிக்கப்பட்ட துறைமுகம் அல்லது விமான நிலையம் அல்லாத)

- சட்டத்தை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தரொருவருக்கு தடையேற்படுத்தல் அல்லது பொய்யான அறிக்கைகள் / வாக்குமூலங்களை வழங்குதல்

- கடவுச்சீட்டொன்றை, வீசா அனுமதிப்பத்திரமொன்றை போலியாக தயாரித்தல் அல்லது மாற்றம் செய்தல்.

- ஏதேனும் சான்றிதழொன்றை போலியாக தயாரித்தல் அல்லது மாற்றம் செய்தல்
- போலியாக தயாரித்த, மாற்றம் செய்த முறையற்ற கடவுச்சீட்டொன்றை சட்டரீதியான அதிகாரம் இன்றி தம்வசம் வைத்திருத்தல்.
- மேற்கூறப்பட்ட குற்றமொன்றை புரிவதற்கு முயற்சித்தல் அல்லது உதவுதல்
- மேற்கூறப்பட்ட குற்றங்களின் தன்மைக்கு ஏற்ப நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டால் ஒரு வருடம் முதல் ஐந்து வருடங்கள் வரை கடுமையான வேலையுடன்கூடிய சிறைத்தண்டனையையும் 02 இலட்சத்துக்கு மேற்படாத அபராதத்தையும் செலுத்த நேரிடும்.

**1994 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மற்றும் 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தின் பிரகாரம் பின்வரும் குற்றங்கள் குற்றவியல் குற்றங்களாகும்.**

- செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றை நடத்துதல்
- செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி பணம் அறவிடுதல்
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்யாமல் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு செல்லல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு வெளிநாடு செல்லும் போது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லக்கூடிய இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும். அவ்வாறு பதிவுசெய்துகொள்வதனால் உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

வெளிநாட்டில் தொழில் புரியும் போது ஏற்படக்கூடிய உயிரிழப்புக்கள் மற்றும் மீண்டும் நாடு திரும்பும் போது நிதியுதவி வழங்கும் முறையிலான காப்புறுதித்திட்டமொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

காப்புறுதித் திட்டத்திற்கு மேலதிகமாக வெளிநாட்டில் தொழில் புரியும் போது நிகழும் அவசர விபத்துக்கள் / நோய்கள் / தொல்லைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

தீர்வை வரி அற்ற மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை வழங்குதல்

அங்கவீனமுற்ற குடியகல்வு ஊழியர்களுக்கு வீடுகள் மற்றும் செயற்கையான உடல் உறுப்புக்களை வழங்குதல்

குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ முகாம்களை நடாத்துதல் மற்றும் தேவையான விதத்தில் மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

குடியகல்வுக்கு முன்னரான கடன்களுக்கு அரச வங்கிகளுக்கு சிபாரிசுக் கடிதங்களை வழங்குதல்

பங்களிப்பு ஓய்வூதியத்தை வழங்குதல் (மனுசவி)

சுயதொழில்களுக்கு நிதியுதவி வழங்குதல்

ஆலோசனை சேவைகள் மற்றும் ஏனைய நலன்புரி வசதிகளை வழங்குதல்

பொருளாதார கஷ்டங்கள் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல்

பிள்ளைகளுக்கு கல்விக்கான புலமைப் பரிசில்கள் வழங்குதல்

## பதிவுசெய்யாமல் வெளிநாடு செல்வதனால் ஏற்படும் பாதிப்புக்கள்

வெளிநாடு ஒன்றில் தொந்தரவுகள் ஏற்படும் போது மீண்டும் இலங்கைக்கு வரவழைத்துக்கொள்வதில் வரையறைகள் காணப்படுகின்றமை

காப்புறுதி நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போதல்

குற்றவாளிகளுக்கு அல்லது மோசடிக்காரர்களுக்கு அதிகபட்ச தண்டனையை வழங்குவதற்கு கடினமாதல்

சட்டரீதியான நடவடிக்கைகளின் போது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் தலையீடு செய்வதில் சிரமங்கள் ஏற்படல்

### அண்மைய காலத்தில் நடந்த ஒரு சம்பவம்

குவைட் நாட்டில் ஈரான் நாட்டு எல்லைக்கு அண்மையிலுள்ள பாலைவனமொன்றில் நடாத்திச் செல்லப்பட்ட பண்ணையொன்றில் பலவந்தமாக தடுத்து வைத்து, தாக்கப்பட்டு, உணவு மற்றும் சம்பளம் வழங்காது வேலையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் 6 பேர் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் மீட்டெடுக்கப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் அனைவரும் திருகோணமலை கின்னியா பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் கின்னியா பிரதேசத்தில் சட்ட விரோதமான தரகர்கள் மூலம் குவைட் நாட்டில்


தொழிலுக்காக சென்றுள்ளனர். அவர்கள் குவைட் நாட்டின் சேக் ஒருவரால் நடாத்தப்படும் பண்ணையொன்றில் இவ்வாறு வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்த இலங்கையர்கள் பண்ணையிலிருந்து குவைட் நாட்டின் இலங்கை தூதரகத்திற்கு இரவு நேரத்தில் எடுத்த தொலைபேசி அழைப்பின் பிரகாரம் அவர்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகைத்தந்த இந்த இளைஞர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக உத்தியோகத்தர்களினால் பொறுப்பேற்கப்பட்டு அவர்களது வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

<u>(2023.01.01 ஆம் திகதி தினசரிப் பத்திரிகையொன்றில் வெளியான ஒரு செய்தி)</u>

**இந்த சிறு துண்டுப்பிரசுரத்திலிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட அறிவை ஏனையவர்களுடனும் பகிர்ந்துகொள்ளுங்கள்**



# உங்களது உதவிக்காக தூரகங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| டுபாய் தூதரகம் | 0097143986535 |
| ஜித்தா தூதரகம் | 00966126065414 |
| ரியாத் தூதரகம் | 00966114608232/5 |
| குவைட் தூதரகம் | 0096525339140/42 |
| ஓமான் தூதரகம் | 0096824697841/2 |
| கட்டார் தூதரகம் | 0097444998660 |
| சிங்கப்பூர் தூதரகம் | 006562544595/96/97 |
| அபுதாபி தூதரகம் | 0097126325335 |
| பஹ்ரேன் தூதரகம் | 0097317008410 |
| இஸ்ரேல் தூதரகம் | 0097235277635 |
| ஜோர்தான் தூதரகம் | 0096265820611/2 |
| லெபனான் தூதரகம் | 009615769585 |
| மலேசியா தூதரகம் | 0060342568987 |
| மாலைத்தீவு தூதரகம் | 009603322845 |
| தென்கொரியா தூதரகம் | 008227352966/7 |
| தாய்லாந்து தூதரகம் | 6621054851 |
| மியன்மார் தூதரகம் | 9518222812 |
| நேபாளம் தூதரகம் | 97714720623 |
| வியட்நாம் தூதரகம் | 84-2437341894 |
| துருக்கி தூதரகம் | 903124271020-25 |
| புது டில்லி தூதரகம் | 911123010201 |
| இந்தோனேசியா தூதரகம் | 62213141016 |

மணி நேர சேவை - 1989

## மனித வியாபாரம் அல்லது ஆட்கடத்தல் தொடர்பான முறைப்பாடொன்றை செய்வதற்கு, தகவல் ஒன்றை வழங்குவதற்கு அல்லது தகவல் பெறுவதற்கு தேவையெனின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.

| | |
|---|---|
| 0112 101 500<br>0112 101 600<br>நீடிப்பு: 634 | **குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்** (ஆட்கடத்தலை கட்டுப்படுத்தும் தேசிய வள நிலையம்) |
| 0112 864 241 | **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்** (விசேட புலனாய்வுப் பிரிவு) |
| 0112 884 707 | **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்** (மனித வியாபாரத்திற்கு எதிரான பிரிவு) |
| 0112 514 375 | **குற்றப் புலனாய்வுத் திணைக்களம்** (மனித வியாபாாம், கடத்தல் விசாாணை மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் திணைக்களம்) |
| 0112 325 372<br>0112 325 373<br>0112 323 015 | **வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு** (கொன்சியுலர் பிரிவு) |
| 0112 445 368 | **இலங்கை கடற்படை** |
| 0112 444 444 | **இலங்கை பொலிஸ்** (பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு) |
| 1929 | **தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை** |

RESILIENCE FUND
Supporting community responses to Organized crime

GLOBAL INITIATIVE
AGAINST TRANSNATIONAL ORGANIZED CRIME

SAFE Foundation
SRI LANKA